2015 ஆகஸ்ட் 31]

மற்ற மாநிலங்களில் இருக்கின்ற நிலுவைத் தொகையை ஒப்பிடுகின்றபோது, நமது மாநிலத்தில்தான் அது குறைவு. கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இந்தியா முழுவதும் கரும்பிற்குண்டான விலையைக் கொடுக்கவேண்டிய நிலுவை இருக்கின்றது. தமிழகத்திலே கிட்டத்திட்ட 902 கோடி ரூபாய் மட்டும்தான் இருக்கின்றது. அதையும் உடனடியாகப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

சார்பதிவாளர் அலுவலகம்

***20115—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தை சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) ஆம்.

(ஆ) சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட, போடிநாயக்கன்பட்டி, வார்டு N பிளாக் 21, நகர புல எண் 27–ல் 11,840 சதுர அடி நிலம் மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் பதிவுத் துறைக்கு நில மாறுதல் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையில் வரும் நிதியாண்டில் மேற்படி இடத்தில்

சார்பதிவாளர் அலுவலகம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் தலைவியே! மனித சக்தி கடந்த மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தவப் புதல்வியே! ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வமே! ஏழரை கோடி தமிழக மக்களின் ஒளிவிளக்கே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய வரலாற்றில் ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் ஒன்றரை இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று, வரலாற்றுச் சாதனை படைத்த வரலாற்றுத் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) நான் வணங்கும் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் நீண்டகாலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதற்கு போடிநாயக்கன்பட்டி கிராமம், ஜாகீர் அம்மாபாளையம், இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி அருகில் இடம் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். ஆகவே, அந்தச் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இந்த ஆண்டு நிதியொதுக்கீடு செய்து உத்தரவு வழங்கிய நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது கோடானுகோடி நன்றிகளை எனது தொகுதி மக்களின் சார்பாக தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் இருக்கக்கூடிய சார்பதிவாளர்*

2015 ஆகஸ்ட் 31]

அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் இதுவரையில் கட்டப்படாமல் இருக்கின்றது. ஏற்கெனவே, இந்த அவையில் நான் கேள்வியைக் கேட்டபோது, அதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாக எனக்கு நினைவு. எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, புதிய ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு 2011 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. அதுபோல், பட்டுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேள்வியை எழுப்பினார். பதிவுத் துறையின் மூலமாக வரும் நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே அதிகமான வருவாய் ஈட்டக்கூடியது ஓசூர் சார்பதிவாளர் அலுவலகமாகும். அந்தச் சார்பதிவாளர் அலுவலகம் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. நாள்தோறும் குறைந்தபட்சம் 200–லிருந்து 250 வரையில் பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்றன. அதற்கு அந்த இடம் போதாது. இதுகுறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறேன். அந்த அலுவலகம் நகரின் மையப் பகுதியில்

இருப்பதனால் நிறைய பிரச்சினைகள் வருகின்றன. எனவே, அவ்வலுவலகத்தை நகரத்திற்கு வெளியே மாற்ற வேண்டும். ஏற்கெனவே, இதுகுறித்து கடிதம் கொடுத்திருக்கிறேன். அதற்கு பதில் வந்திருக்கிறது. அது என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி அலுவலகக் கட்டடத்தை அந்த இடத்திலிருந்து மாற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கையை உடனடியாக எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் அதிக ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்ற காரணத்தால், அங்கே போதிய இடவசதியில்லை, மாற்று இடவசதி வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டார். பதிவுத் துறையின் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஒட்டுமொத்த பொதுமக்களுக்கு ஏற்புடைய இடமாகத் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டித் தர பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

168—

கால்நடை மருத்துவமனை

***52417—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியம், முத்துக்காபட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?